## இந்தியத்தேர்தல்முடிவுகள் – திருச்சபை மகிழ்ச்சி




இந்தியத்தேர்தல்முடிவுகள் குறித்துத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது இந்தியத்திருச்சபை. மதச்சார்பற்றதும் முன்னேற்றகொள்கையுமுடைய அரசைத்தேர்ந்தெடுக்கத் தீர்மானித்த இந்திய வாக்காளர்களுக்கு நாங்கள் நன்றிகூறுகிறோம் என இந்திய ஆயர் பேரவை அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
இந்திய ஆயர் பேரவை செயலர் பேராயர் சேசுசபையின் ஸ்தனிஸ்லாஸ் பெர்னான்டெஸ் ‘தேர்தல் முடிவுகளால் நாட்டு அரசியல்சட்டத்தின் மதச்சார்பில்லா கொள்கையை வளர்ப்பதற்கு அரசு புதிய ஊக்கம் பெறும்’ என நம்பிக்கை தெரிவித்தார்.
தங்கள்மதத்தை மட்டும் வளர்த்துச் சிறுபான்மை மதத்தவரை ஒடுக்க நினைத்தவர்களுக்கு வாக்காளர்கள் நல்ல பாடம் புகட்டியிருப்பதாகவே சிறுபான்மையினர் கருதுகிறார்கள்.
பிளவுபடுத்தும் சக்திகளினின்று மக்களைக்காப்போம் என்றும், நிலையான மதச்சார்பில்லா ஜனநாயக ஆட்சி மலரும் என எல்லா மக்களிலும், சிறப்பாகச் சிறுபான்மை மதத்தவரிடையே, நம்பிக்கையை மீண்டும் கொண்டுவருவோம் என்ற தேர்தல் வாக்குறதியை யுபிஏ அரசு செயல்படுத்தட்டும் என இந்திய கத்தோலிக்க ஆயர்கள் தங்கள் அறிக்கையில் கோரியுள்ளார்கள்.

## இலங்கை – திருத்தந்தை கவலை




இலங்கையில் துன்புறும் குழந்தைகள் பெண்டிர் மற்றும் முதியோருக்கு சர்வதேச அமைப்புகள் தேவையான மனிதாபிமான உதவிகளை ஆற்றவேண்டுமென அழைப்புவிடுத்த திருத்தந்தை பதிநாறூம் பெனடிக்ட் இலங்கையில் அமைதி மற்றும் ஒப்புறவுக்காக ஜெபிக்குமாறும் அழைப்புவிடுத்துள்ளார். கடந்த மூன்றுமாதங்களிவ் மட்டும் இவங்கை வடபகுதிப்போரில் பெருமளவான மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கியநாடுகள் நிறுவனம் அறிவித்துள்ள நிலையில் இலங்கையின் துன்ப நிலை குறித்து மே 17 ஞாயிறு மூவேளை ஜெப உரையில் தன் கவலையை வெளியிட்ட பாப்பிறை அம்மக்களோடு தான் கொண்டுள்ள ஆன்மீக நெருக்கத்தையும் குறிப்பிட்டார்.

மோதலில் சிக்கித்தவிக்கும் அப்பாவி மக்களுக்காக ஐ.நா.வுடன் இணைந்து தானும் தன் குரலை எழுப்புவதாக உரைத்த பாப்பிறை போரிடும் இருதரப்பினரும் இம்மோதல்களிடையே சிக்கியுள்ள அப்பாவிமக்கள் பாதுகாப்புடன் அங்கிருந்து வெளியேறுவதற்கான உதவிளை வழங்கவேண்டுமெனவும் விண்ணப்பித்துள்ளார்.

அவர் உரை முடித்த சில மணிநேரத்தில், விடுதலைப்புலிகளுடனான போர் முடிவுக்கு வந்துவிட்டதாக நாட்டு அதிபர் மகிந்தா ராஜபக்சே அறிவித்தார். விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனும் முக்கிய இராணுவத்தலைவர்களும் கொல்லப்பட்டுவிட்டதாகவும் அவர் அறிவித்தார்.

**இலங்கை போர் நிறுத்தம் குறித்துப்பேசிய ஸ்ரீலங்கா ஆயர்பேரவைத்தலைவர் கொழும்பு பேராயர் ஆஸ்வல்டு கோமிஸ் ஒரே குடும்பம் என்ற உணர்வு எல்லோருக்கும் வந்தால் மட்டுமே போர் முடிந்துவிட்டது எனக்கூற முடியும் என்றார். பலசமூகங்கள், பலமதங்கள், பல பாரம்பரீயங்கள் உள்ளடக்கியது நம் சமுதாயம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.**

## குருக்கள் அதிகமாகவும் நன்றாகவும் செபிக்கத் திருத்தந்தை வலியுறுத்தல்

குருக்கள் அதிகமாகவும் நன்றாகவும் செபிப்பதன் மூலம் அவர்கள் கிறிஸ்துவோடு மிக நெருக்கமாக ஒன்றித்திருக்க முடியும் என்று கூறினார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.



வத்திக்கான் துய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் உரோம் மறைமாவட்டத்திற்கென 19 புதிய குருக்களைத் திருநிலைப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை, கிறிஸ்துவின் பெயரில் மீட்பை அறிவித்து வரலாற்றின் போக்கை மாற்றிய திருத்துதர்கள் போன்று புதிய குருக்களும் தங்களை முழுவதும் கடவுளுக்கு அர்ப்பணித்து வாழுமாறு வலியுறுத்தினார்.

இறைவனாம் தந்தையின் பெயரை அறிவதிலும் அவரின் முகத்தைக் காண்பதிலும் இயேசு அனுபவித்த அதே மகிழ்ச்சியைச் சீடரும், சிறப்பாக திருத்துதரும் அனுபவிக்கின்றனர் என்ற அவர், கடவுள் காண முடியாதவராய் இருந்தாலும் அவரது அன்பு மாறாதது என்பதை அறிந்து இயேசு அனுபவித்த துன்பத்தையும் அவரது சீடர் பகிர்ந்து கொள்கிறார் என்றார்.

புனித யோவான் தமது முதல் திருமடலில் சொல்லியிருப்பது போல, நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம், கடவுளின் மக்களாகவே இருக்கிறோம். உலகம் அவரை அறிந்துகொள்ளாததால்தான் நம்மையும் அறிந்து கொள்ளவில்லை என்று ஒருபுறம் சொல்கிறோம் என்றார் அவர்.

உண்மைதான. யோவான் குறிப்பிட்டுள்ள உலகம், கிறிஸ்தவர்களைப் புரியாததால் நற்செய்தியின் திருப்பணியாளர்களையும் புரிந்து கொள்ளவில்லை என்ற திருத்தந்தை, ஏனெனில் உலகம் கடவுளை அறியவில்லை, அவரை அறிய விரும்பவுமில்லை என்றார்.

இருந்த போதிலும் உலகம் திருச்சபையின் அங்கத்தினர்களையும், ஏன், திருநிலைப்படுத்தப்பட்ட அதன் திருப்பணியாளர்களையும் கறைப்படுத்தி அதனைக் கண்ணியில் சிக்க வைக்கிறது என்றும் எச்சரித்தார் திருத்தந்தை.

இந்த உலகின் மனநிலையும், சிந்திக்கும் போக்கும் திருச்சபையைக் கறைப்படுத்த முடியும், ஏன், கறைப்படுத்துகின்றது, எனவே நாம் தொடர்ந்து விழிப்பாய் இருக்கவும் நம்மைப் புதுப்பித்துக் கொள்ளவும் வேண்டியிருக்கின்றது என்றார் அவர்.

நாம் உலகில் இருக்கிறோம், உலகின் போக்குப்படி செல்லும் ஆபத்தையும் எதிர்நோக்குகிறோம், சிலசமயங்களில் அவ்வாறு இருக்கிறோம் என்று புதிய குருக்களிடம் கூறிய திருத்தந்தை,

புனிதமடையவும் கடவுளிடம் முழுவதும் சரணடையவும் செபமே சிறந்த வழி, எல்லாவற்றிக்கும் மேலாக அன்றாடத் திருப்பலி இந்நிலையை அடைய வழியாக இருக்கின்றது என்று உரைத்தார்.

திருநற்கருணைக் கொண்டாட்டம் மிகப்பெரிய மற்றும் மிக உன்னதச் செபச் செயலாகும், இதிலிருந்து திருப்புகழ்மாலை, திருநற்கருணை ஆராதனை, லெக்சியோ திவினா என்ற இறைவாசிப்பு, செபமாலை, தியானம் ஆகிய பிற செப வடிவங்கள் தங்களது உயிர்ச்சாற்றைப் பெறுகின்றன என்றும் அவர் கூறினார்.

அதிகமாகவும் நன்றாகவும் செபிக்கும் குரு தன்னிலிருந்து அதிகம் விடுபட்டு நல்ல ஆயனாகவும் தன் சகோதரருக்கு ஊழியனாகவும் இருக்கின்ற இயேசுவோடு அதிகம் ஒன்றித்திருக்க முடியும் என்று திருப்பலி மறையுரையில் கூறினார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.



## புனித பூமிக்காகச் செபிக்கத் திருத்தந்தை அழைப்பு

புனித பூமிக்காகவும் அப்பகுதி மக்களுக்காகவும் தன்னுடன் சேர்ந்து சிறப்பாகச் செபிக்குமாறு கேட்டுள்ளார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.

நம் ஆண்டவர் பிறந்து, இறந்து உயிர்த்த மற்றும் ஒரே கடவுள் மீது நம்பிக்கை கொண்ட மூன்று மதங்களுக்கானப் புனித இடமாக விளங்கும் புனித பூமி, அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வன்முறைகளாலும் அநீதிகளாலும் நிறைந்துள்ளது, இது அங்கு நம்பிக்கையின்மையையும், நிச்சயமற்ற தன்மையையும் பயத்தையும் கொண்ட பொதுவான சூழலை உருவாக்கியுள்ளது என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

புனித பூமி மக்கள் ஒப்புரவு, நம்பிக்கை, அமைதி ஆகியக் கொடைகளைப் பெறுவதற்கு அவர்களுக்காகச் செபிக்குமாறு அழைப்புவிடுத்த திருத்தந்தை, போர், பிளவு, வறுமை, ஏமாற்றம் ஆகியவற்றால் நிறைந்துள்ள இன்றைய உலகுக்கு கடவுளின் அமைதியின் அருள் உண்மையிலே மிகவும் தேவைப்படுகிறது என்றார்.

இன்று அகில உலகும் மிகுந்த கவலை தரும் பொருளாதார சூழலோடு போராடி வரும் இவ்வேளையில், கிறிஸ்தவர்கள் நம் ஆண்டவரின் ஆறுதல் தரும் வார்த்தைகள் கேட்கப்படுவதற்குக் கடினமாக உழைக்குமாறும் திருத்தந்தை வலியுறுத்தினார்.

ஒருவருக்கொருவர் உதவுதல், பலப்படுத்துதல், நம்பிக்கை ஆகியவற்றின் புளிக்காரமாகவும் கிறிஸ்தவர்கள் வாழுமாறும் பாப்பிறை அமைப்பின் பிரதிநிதிகளிடம் கூறினார் பாப்பிறை 16ம் பெனடிக்ட்.

திருத்தந்தையின் புனித பூமிக்கானத் திருப்பயணம் மே மாதம் 8 முதல் 15 வரை இடம் பெற்றது.



## உலகில் சகிப்பற்றதன்மையை அகற்றுவதற்கு நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட திருத்தந்தை வலியுறுத்தல்

ஜெனீவாவில் இடம்பெற்ற இனப்பாகுபாட்டிற்கெதிரான ஐ.நா கருத்தரங்கிற்கு வத்திக்கான் பிரதிநிதி குழுவை

அனுப்பியுள்ள அதேவேளை, உலகில் சகிப்பற்றதன்மையை அகற்றுவதற்கு நாடுகள் ஒன்றிணைந்து செயல்படுமாறு வலியுறுத்தினார் திருத்தந்தை.

வரலாறு கற்றுக் கொடுத்துள்ள பாடங்களையும் தவிர்த்து இன்றும்கூட இத்தகைய வருந்ததக்க சகிப்பற்றதன்மை சார்ந்த செயல்கள் இடம் பெறுவதால் இந்த ஐ.நா.வின் முயற்சி முக்கியத்துவம் நிறைந்தது என்றார்.

இதில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள், உரையாடல் மற்றும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளும் உணர்வுடன் இனவெறி, இனப்பாகுபாடு, சகிப்பற்றதன்மை ஆகியவற்றின் ஒவ்வொரு வடிவத்திற்கும் முடிவு கட்டுவார்கள் எனத் தான் நம்புவதாகவும் திருத்தந்தை தன் செய்தியில் தெரிவித்திருந்தார்.

இத்தகைய முயற்சி, மனிதனின் மாண்பு மற்றும் அவனின் உரிமைகளின் உலகளாவிய மதிப்பீட்டை உறுதி செய்வதற்கான ஓர் அடிப்படை நடவடிக்கையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலகில் சகிப்புத்தன்மையை ஏற்படுத்த தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும், இது குறித்து கல்வி புகட்டப்பட வேண்டுமெனவும் அவர் கோரினார்.

இதற்கிடையே, ஐக்கிய நாடுகள் நிறுவனம் கடந்த எட்டு ஆண்டுகளில் முதன்முறையாக தொடங்கிய இனப்பாகுபாடு குறித்த உலகக் கருத்தரங்கை அமெரிக்க ஐக்கிய நாடு, இத்தாலி, ஆஸ்திரேலியா, கானடா, இஸ்ரேல் எனக் குறைந்தது எட்டு நாடுகள் புறக்கணித்தன.

இக்கருத்தரங்கிற்கான தொகுப்பு, இஸ்ரேல் பற்றி விமர்சித்துள்ளது மற்றும் பேச்சு சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது என, இப்புறக்கணிப்புக்கு காரணங்கள் சொல்லப்பட்டுள்ளன. இத்தகைய முதல் உலக மாநாடு 2001ல் தென்னாப்ரிக்காவின் டர்பனில் நடைபெற்றது. எல்லா மக்களும் வளமான பன்மைத்தன்மையில் ஒரே மனிதக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது இதில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## நாடுகள் அணுஆயுத ஒழிப்பை ஊக்குவிக்கத் திருப்பீடம் அழைப்பு



நாடுகள் மத்தியில் நம்பிக்கை, பாதுகாப்பு மற்றும் அமைதியை வளர்ப்பதற்கு அணுஆயுதங்கள் ஒழிக்கப்படவும் ஆயுதப் பரவல் நிறுத்தப்படவும் சர்வதேச சமுதாயம் ஊக்குவிக்குமாறு அழைப்புவிடுத்தார் திருப்பீட உயர் அதிகாரி ஒருவர்.

அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்யும் 2010ம் ஆண்டின் கூட்டத்திற்கானத் தயாரிப்புக் குழுவில் உரையாற்றிய, ஐ.நா.வுக்கானத் திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் செலஸ்தீனோ மிலியோரே இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

கடந்த 40 வருடங்களாக சர்வதேச சமுதாயத்தின் நற்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துள்ள திருப்பீடம், இந்த ஒப்பந்தத்திற்குத் உறுதியான ஆதரவைத் தொடர்ந்து கொடுக்கின்றது என்பதைக் கோடிட்டுக் காட்டினார் அவர்.

உலகில் 26 ஆயிரத்துக்கு மேற்பட்ட அணுஆயுதங்கள் இன்னும் இருக்கின்றன என்ற பேராயர் மிலியோரே, அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் சட்டரீதியாக நாடுகளைக்

கட்டுப்படுத்தினாலும் இன்றும் சிலநாடுகள் இந்த அணுஆயுத தடைக்குழுவில் சேர்வதற்கு முனைப்பாக இருக்கின்றன என்றார்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த விவாதங்களில் அணுஆயுத ஒழிப்பும் ஆயுதப் பரவல் தடையும் மைய இடத்தில் இருப்பதும், இது குறித்த நாடுகளின் முயற்சியும் ஊக்கமூட்டுவதாகவும் இருக்கின்றன, எனினும் இந்த ஆயுத ஒழிப்புக்குத் தெளிவான மற்றும் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைத் திருப்பீடம் விரும்புகிறது என்றும் பேராயர் கூறினார்.



## வத்திக்கான் அருங்காட்சியகம் நில நடுக்கப் பாதிப்புக்கு உதவி.

வத்திக்கான் அருங்காட்சியகம் வழக்கமாக ஞாயிறு தினங்களில் மூடப்பட்டிருக்கும் . இத்தாலியின் லாஆக்குயிலாவில் பூமி அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக மே மாதம் 10 ஆம் தேதி ஞாயிறு அன்று வத்திக்கான் அருங்காட்சியகம் திறக்கப்பட்டு அன்றைய வசூல் லாஆக்கிலாவுக்கு வழங்கப்பட்டது. கோடைகாலம் தொடங்கியுள்ளதால் ஒவ்வொரு நாளும் இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் உரோமைக்கு வருகிறார்கள் என்பதும், அருங்காட்சியகத்தில் நுழைவதற்கு முன்னர் வெகு தொலைவு வரிசையில் நிற்கவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது .

## ஹாங்காங்கில் வருகிற ஜூலை முதல் தேதியிலிருந்து 2010ம் ஆண்டு இறுதி வரை குருத்துவ அழைத்தல் ஆண்டு

ஹாங்காங்கில் ஏற்பட்டுள்ள குருக்கள் பற்றாக்குறை பிரச்சனையைக் களையும் நோக்கத்தில் குருத்துவ அழைத்தல் ஆண்டை அறிவித்துள்ளார் ஹாங்காங் ஆயர் ஜான் டாங் ஹோன்.



ஹாங்காங் மறைமாவட்டத்தின் புதிய ஆயராகப் பதவியேற்ற நிகழ்வில் பேசிய அவர், குருத்துவ அழைத்தல் அதிகரிக்க அனைவரையும் ஊக்குவிக்கவிருப்பதாகவும் கூறினார்.

வருகிற ஜூலை ஒன்றாந்தேதியிலிருந்து 2010ம் ஆண்டு இறுதி வரை குருத்துவ அழைத்தல் ஆண்டு சிறப்பிக்கப்படும் என்றார் ஆயர் டாங் ஹோன்.



பாஸ்கா கால 4ம் ஞாயிறு அகிலத் திருச்சபையில் இறையழைத்தல் ஞாயிறாகச் சிறப்பிக்கப்படுகின்றது. அன்றைய தினம் குருத்துவ மற்றும் துறவு வாழ்வுக்கு அழைத்தல்கள் அதிகரிக்கச் செபிக்குமாறு அனைத்து விசுவாசிகளும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## மியான்மாருக்கு சர்வதேச நிவாரண உதவிகள் மேலும் தேவைப்படுகின்றன, – ஐ.நா.

மியான்மாரில் நர்கீஸ் கடும் புயல் ஏற்பட்டு ஓராண்டு ஆகியுள்ள இவ்வேளையில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வதேச நிவாரண உதவிகள் தேவைப்படுவதாக ஐ.நா. கூறியது.

தென் கிழக்கு ஆசிய நாடான மியான்மாரில் 2008ம் ஆண்டு மே 2,3 தேதிகளில் மணிக்கு 240 கிலோ மீட்டர் வேகத்தில் அடித்த புயல் மற்றும் 4 மீட்டர் உயரத்திற்கு எழுந்த அலைகளினால் சுமார் 1,40, 000 பேர் இறந்தனர் மற்றும் சுமார் 24 இலட்சம் பேரின் வாழ்வும் கேள்விக்குறியானது.

இந்த ஓராண்டு காலத்தில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறார் படிப்பதற்கு உதவிகள் செய்யப்பட்டுள்ளன, 4000 மெட்ரிக் டன் நெல் விநியோகிக்கப்பட்டுள்ளது. 4000 கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன.

எனினும், நிவாரணப் பணிகளைத் தொடருவதற்கு சர்வதேச உதவிகள் மேலும் தேவைப்படுவதாக ஐ.நா.கூறியது.

## யூதஇனப் படுகொலைகளின் போது யூதர்களைக் காப்பாற்றிய கத்தோலிக்கரை கௌரவிக்க முயற்சி

யூத இனப்படுகொலைகள் இடம் பெற்ற போது கத்தோலிக்கரால் காப்பாற்றப்பட்ட யூதர்களின் சாட்சியங்களைச் சேகரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது ராவுல் வல்லன்பெர்க் என்ற சர்வதேச அமைப்பு.

திருத்தந்தை 16ம் பெனடிக்டின் புனித பூமிக்கானத் திருப்பயணத்தை யொட்டி இம் முயற்சியில் இறங்கிய இச்சர்வதேச அமைப்பு, இரண்டாம் உலகப் போரின் போது நாத்சிகளால் வதைக்கப்பட்ட யூதர்களைக் காப்பாற்றுவதற்காக ஐரோப்பிய கண்டத்தில் பெரும் எண்ணிக்கையில் கத்தோலிக்கர் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து செயல்பட்டுள்ளனர் என்று கூறியது.

இக்கத்தோலிக்கரில் மிகச்சிலரே இனம் காணப்பட்டு நன்மதிப்பு அளிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவ்வமைப்பு கூறியது.

யூதர்களைக் காப்பாற்றிய கத்தோலிக்கரை இனம் கண்டு கௌரவிப்பதன் மூலம் திருத்தந்தையின் புனித பூமிக்கானத் திருப்பயணத்தை கொண்டாடவும் கத்தோலிக்கருக்கும் யூதருக்கும் இடையே தோழமையை ஊக்குவிக்கவும் விரும்புவதாக அவ்வமைப்பின் அறிக்கை கூறியது.

## கென்ய அரசியல் தலைவர்கள் நம்பிக்கைக்குரியவர்களாகச் செயல்பட ஆயர்கள் அழைப்பு

கென்ய நாட்டு அரசியல் தலைவர்கள் குடிமக்களின் தேவைகளைப் புறக்கணிக்கின்றனர் மற்றும் அவர்களின் சொந்த ஆதாயங்களைத் தேடுகின்றனர் என்று அந்நாட்டு கத்தோலிக்க ஆயர்கள் குறை கூறினர்.

குடிமக்களுக்குச் சொந்தமான உடமைகளும் செல்வங்களும் அரசியல்வாதிகளால் தான்தோன்றித்தனமாகப் பயன்படுத்தப்படுகின்றன என்றுரைக்கும் ஆயர்களின் அறிக்கை, பூர்வீக இனத்தவர் தவறாகப் பயன்படுத்தப்படுவது அவர்களுக்குள் பிளவுகளை அதிகரிக்கின்றன என்றும் கூறியது.



பணம் இருந்தால் யாரும் எதையும் சாதிக்கலாம் என்ற உணர்வு இருப்பதாகக் கூறிய கென்ய ஆயர்கள், அரசியல் தலைவர்கள் குடிமக்களின் நம்பிக்கைக்குரியவர்களாகச் செயல்படவும் அழைப்புவிடுத்துள்ளனர்.

## ஐந்தாவது ஆசிய இளையோர் தினத்திற்கானத் தயாரிப்புக்கள் தொடங்கப்பட்டுள்ளன

பிலிப்பைன்சில் வருகிற நவம்பர் 20 முதல் 27 வரை சிறப்பிக்கப்படவுள்ள ஐந்தாவது ஆசிய இளையோர் தினத்திற்கானத் தயாரிப்புக்கள் அந்நாட்டின் சிலாங்கில் தொடங்கப்பட்டுள்ளன.



இந்த ஆசிய இளையோர் தினம் சிறப்பிக்கப்படவுள்ள சிலாங் அன்னைமரி பேராலயத்தில் சுமார் ஆயிரம் இளையோர் கூடி இத்தயாரிப்புக்களின் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் பொது நிலையினர் மற்றும் குடும்ப ஆணையத்தின் இளையோர் அலுவலகமும், பிலிப்பைன்ஸ் ஆயர் பேரவையின் இளையோர் ஆணையமும் சேர்ந்து ஐந்தாவது ஆசிய இளையோர் தினத்தை நடத்துகின்றன.

ஆசிய இளையோர் தினம் 1999ல் தாய்லாந்திலும், 2001ல் தாய்வானிலும், 2003ல் இந்தியாவிலும், 2006ல் ஹாங்காங்கிலும் நடைபெற்றன.

இளம் ஆசியர்கள் ஒன்று சேர்ந்து வந்து இறைவார்த்தையைப் பகிர்ந்து திருநற்கருணையை வாழ்தல் என்பது ஐந்தாவது ஆசிய இளையோர் தினத்திற்கானத் தலைப்பாகும்.

## மலேரியா நோய் சார்ந்த இறப்புக்களைத் தடுப்பதற்கான முயற்சிகள் இரட்டிப்பாக்கப்பட ஐ.நா. பொதுச் செயலர் அழைப்பு

2010ம் ஆண்டுக்குள் மலேரியா நோய் சார்ந்த இறப்புக்களைத் தடுப்பதற்கு நாடுகள் தங்கள் முயற்சிகளை இரட்டிப்பாக்குமாறு கேட்டுள்ளார் ஐ.நா.பொதுச் செயலர் பான் கி மூன்.

உலக முதல் மலேரியா தினம் கடைபிடிக்கப்பட்டதை முன்னிட்டு செய்தி வழங்கிய மூன், மலேரியாவால் தாக்கப்படும் அனைவருக்கும், குறிப்பாக ஆப்ரிக்காவில் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கும் சிறாருக்கும் கொசுவலைகளும் மருந்துகளும் விநியோகிக்கப்படும் என்றார்.



மேலும் 50 கோடிப் பேருக்கான கொசுவலைகளுக்கும், மலேரியாவுக்கு சிகிச்சை கொடுக்கும் மருத்துவமனைகள், இன்னும் நலவாழ்வுப் பணியாளருக்குப் பயிற்சி போன்றவைகளுக்கும் விண்ணப்பித்துள்ளார் அவர்.

மலேரியாவினால் ஆண்டுதோறும் ஏற்படும் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட இறப்புகளில் 90 விழுக்காடு ஆப்ரிக்காவில் இடம் பெறுகின்றது

## உள்ளத்தில் நல்ல உள்ளம்

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் பிறந்த ஹென்றி டுனன்ட், பெரிய பணக்கார வியாபாரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் 1859ம் ஆண்டு ஜூன் மாதத்தில், அப்போது இத்தாலியில் இருந்த ப்ரெஞ்ச் பேரரசர் மூன்றாம் நெப்போலியனை, அவரது அல்ஜீரிய வியாபார விடயமாக சந்திக்கச் சென்றார். ஜூன் 24ம் தேதி மாலை சோல்ஃபெரினோ (ளுழடகநசiழெ) என்ற சிறிய நகரை அவர் அடைந்த போது அங்கே ஆஸ்ட்ரிய–சர்தீனிய போரைப் பார்த்தார். ஒரேநாளில் ஏறத்தாழ நாற்பதாயிரம் படைவீரர்கள் இரண்டு தரப்பிலும் இறந்தனர் மற்றும் காயமடைந்தனர். பேரரசரைச் சந்திக்கச் சென்ற நோக்கத்தையே மறந்து போரில் காயமடைந்தவர்களுக்கு உதவி செய்யத் தொடங்கினார். அந்த ஊர் மக்களையும் அந்த உதவியில் ஈடுபடுத்தினார். பின்னர் ஜெனீவா திரும்பினாலும் அவரது மனம் வியாபாரத்தில் ஈடுபடவில்லை. 1862ம் வருடம் தனது சொந்த செலவில் "சோல்ஃபெரினோ நினைவுகள்" என்ற நுலை எழுதி வெளியிட்டார். அதை ஐரோப்பாவில் முக்கியமான அரசியல் தலைவர்களுக்கும் அனுப்பினார். காயப்படும் வீரர்களுக்குச் சிகிச்சை தர மருத்துவமனைகள், அவற்றில் பணியாற்ற மருத்துவர்கள், தாதியர், தன்னார்வத் தொண்டர்கள் தேவை. எந்த நாட்டு வீரர்கள் என்றும் பார்க்காமல் காயப்படும் வீரர்கள் எல்லாருக்கும் சேவை செய்யும் தன்னார்வத் தொண்டர்களை யாரும் தாக்கக் கூடாது, மாறாக அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டியது போரிடும் தரப்புகளின் கடமை. இவ்வாறெல்லாம் அந்நுலில் எழுதியிருந்தார்.

அதோடு நின்றுவிடாமல் இந்தத் தனது கருத்துக்களைச் செயல்படுத்த ஜெனீவாவில் நான்கு முக்கிய பிரபலக் குடும்பங்களிலிருந்து நான்கு பேரைச் சேர்த்து ஐவர் குழு ஒன்றை அமைத்தார். இக்குழுவின் முயற்சியால் 1863ம் ஆண்டு ஜெனீவாவில் ஒரு சர்வதேச மாநாட்டை நடத்தினார். ஹென்றி டுனன்ட் உருவாக்கிய குழு, 1876ல் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் என்ற பெயரைச் சூடிக் கொண்டது. 1901ம் வருடம் அமைதிக்கான நொபெல் விருதும் ஹென்றி டுனன்ட்டுக்குக் கிடைத்தது. இவர் 1910ம் ஆண்டு அக்டோபர் 30ம் தேதி தனது 82வது வயதில் இறந்தார். இந்த மாமனிதன் ஏற்படுத்திய செஞ்சிலுவைச் சங்கத்தில் இன்று ஏறத்தாழ ஒன்பது கோடியே எழுபது இலட்சம் தன்னார்வப் பணியாளர்கள் 186 நாடுகளில் சேவையாற்றி வருகின்றனர்.

## ஈராக்கில் 2005ம் ஆண்டிலிருந்து 87,215 குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்



ஈராக்கில் குண்டுவெடிப்புகள், துக்கிலிடுதல் என இடம் பெறும் இத்தகைய இடர்களில் 2005ம் ஆண்டிலிருந்து 2009 ஏப்ரல் வரை 87,215 குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டு அரசு வெளியிட்ட புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இறந்துள்ள 87,215 குடிமக்களில் 59,957 பேர் 2006க்கும் 2007க்கும் இடைப்பட்ட காலத்தில் இறந்தவர்கள் என்றும் அரசின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனை வட்டாரங்கள் மற்றும் ஊடகங்களின் அறிவிப்புப்படி, 2003ம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைமையில் நடந்த ஆக்ரமிப்புக்குப் பின்னர் இதுவரை 1,10,600 க்கு அதிகமான ஈராக்கியர்கள் இறந்துள்ளனர் என்று ஏ. பி. செய்தி நிறுவனம் கூறியது.

## பகிர்தல் நேரம்

எம். பிரான்சிஸ், மதுரை. : இலங்கையில் கிறிஸ்தவர்களும் தமிழர்களும் படும் அவதியை நம் வானொலி வாயிலாக அறிந்து மிகவும் வேதனைப்பட்டு செபித்து வருகிறோம்.

டி. குமார், குருவம்பட்டி, திருச்சி. : விவிலியத் தொடர் நிகழ்ச்சி பேருதவியாய் இருக்கிறது. பொய்சாட்சி கூறுவது கூடாது. வறுமையால் வாடுவது அகற்றப்படுவதற்கு நீதி கிட்ட வேண்டும். வேதத்தைச் சிறிது நேரமாவது கேட்க முடிகிறது.

எஸ். பக்கீர் முகைதீன், பானு ஹாலித் அம்ஜத் ராஜா, குட்டி பாப்பா, முதலியார்பட்டி. : விவிலியத் தொடரில் அறிவிலாச் செல்வந்தன் பற்றிய கருத்துப் பெட்டகம் கேட்டோம். நிலைமாறும் உலகில் நிலைக்கும் என்ற கனவில் வாழும் மனித ஜாதி என்ற பாடலே நினைவுக்கு வந்தது. எதுவுமே நிலையானது அல்ல.



மகராஜன், சரஸ்வதி, ஆறுமுகபுரம், குமரி மாவட்டம். : வேளாங்கண்ணிக்கான இரயில் போக்குவரத்துக்கு வேளாங்கண்ணி திருத்தல நிர்வாகம் ஒரு கோடி ரூபாய் கொடுத்துள்ள விபரம் நம் இதழ் மூலம் அறிந்தேன். மேலும், அரசியல் ரீதியான ஆர்வம் குறைவால் அமைதி இல்லை, தாய்மைப் பேற்றின் போது ஏற்படும் இறப்புகள் பற்றிய யூனிசெப்பின் கருத்துக்கணிப்பு, இப்படி எல்லாத் தலைப்புக்களையும் கொண்ட தகவல்கள் சிறப்பாக இருந்தன.

எஸ். சேகர், பரசலூர். : பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் பற்றிய நாடகம், கண்டிப்பும் தண்டனையும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே பொறுப்புணர்ச்சியை அதிகப்படுத்தும், அன்பான கண்டிப்பே நல்வழிப்படுத்தும் என்பதை உணர்த்தியது.

சலேசிய சபை அருட்சகோதரர் ஆனந்த். :
உங்களின் நேர்த்தியான நிகழ்ச்சிகளுக்கு மிக்க நன்றி. இயேசுவும் இராயப்பரும் கதாகலாப நிகழ்ச்சியை ஞாயிறு பல்சுவையில் கேட்டேன். இணையதளத்தில் நிகழ்ச்சிகளைக் கேட்டு என்னுடன் இருப்பவர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

பி. கதிரேசன், திருமங்கலம், மதுரை. : செவ்வாய் இரவு ஒலிபரப்பான விவிலியத் தேடல் நிகழ்ச்சியில் இயேசு கிறிஸ்து கூறிய உவமைகள் ஆழ்ந்து சிந்திக்கக்கூடியன. அன்பைப் பற்றி பவுல் அடிகளார் கூறியது நம்மை பிரமிக்க வைக்கிறது. நிகழ்ச்சியில் ஒலித்த இனிய பாடலும் மனச்சாந்தியை ஏற்படுத்தியது.

கவிஞர் ஜெ.ம. புதுயுகன், பண்ணந்தூர், கிருஷ்ணகிரி மாவட்டம். : வத்திக்கான் நிகழ்ச்சிகளும் செய்திகளும் அருமை. தொடர்ந்து கடிதம் எழுதாமைக்கு வருந்துகிறேன்.

எஸ். பொருநை பாலு, திருநெல்வேலி. : காலக் கண்ணாடி மூலம் பல நல்ல தகவல்களையும் நற்செய்தி மூலம் இறைவன் இயேசு மக்களுக்குத் தந்த ஆன்மீக வழிகளையும் அறிய முடிகிறது. இன்றைய உலகுக்குத் தேவையான இறையன்பு, மனித நேயம், சமூக விழிப்புணர்வு போன்றவைகளுக்கு இந்திய காரித்தாஸ் முக்கியத்துவம் கொடுத்து செய்து வருவதை நேர்காணலில் கேட்டேன். விவிலியத் தேடல் தந்த பல்வேறு தகவல்கள் கேட்டுப் பயன் அடைந்தேன். புனித பவுல் உரோமையருக்குச் சொன்ன செய்திகள் மற்றும் உலகில் அழியாத செல்வம் இறைவழிபாடுதான் போன்றவை கேட்டுப் பயன் அடைந்தேன.

மும்பை சுகுமார், ஆந்திரா. : சில இடைவெளிக்குப் பிறகு நிகழ்ச்சி கேட்டேன். தன்னம்பிக்கையின் ஆழத்தை வாரம் ஓர் அலசல் நிகழ்ச்சி தந்தது. மனிதம் போற்றி பூமியைக் காப்போம்.

---

## இலங்கை முகவரிகள்

அருட்திரு.டி.ஜே.கிருபாகரன், ஆயர் இல்லம், தபால் பெட்டி எண் 2, யாழ்ப்பாணம், இலங்கை
அருட்திரு பெனோ அலெக்சாண்டர்,சமூகத் தொடர்பு மையம், தூய வளன் தெரு, பெட்டா, மன்னார், இலங்கை.
அருட்திரு.ரோகன், புனித கிளாரட் செமினரி, காத்துவா, நெகோம்போ, இலங்கை.

## சென்னை அலுவலக முகவரி

வத்திக்கான் வானொலி–இந்திய அலுவலகம், லொயோலா கல்லூரி, சென்னை – 600 034, கைபேசி : 9444643818 , தொலைபேசி : 044–28178410, மின் அஞ்சல் :
vradio@loyolacollege.edu

## தலைமையக முகவரி

Vatican Radio, Tamil Programs, Indian Section, 00120 Vatican City.
www.vaticanradio.org
வானொலி கேட்க: www.radiovaticana.org/in3/on_demand.asp

WWW.anbinmadal.org